# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 1955/SCIC/2023

திரு.M.ராமசாமி த/பெ.முத்துகிருஷ்ணன்
எண்.10/1, 4வது குறுக்குத் தெரு — மேல்முறையீட்டாளர்
தங்கராஜ் நகர், பழைய பெருங்களத்தூர்
சென்னை - 600 063.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
தா.பழூர், அரியலூர் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 18.11.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.12.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 24.12.2022 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 23.01.2023 |
| 5. | ஆணையத்தின் அறிவிப்பு | 20.04.2023 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர் அலுவலகம், தா.பழூர் சார்பதிவகம், அரியலூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், கருப்பூர் கிராமம், பெரிய கவரைத் தெருவில் வசித்த கோ.கண்ணம்மாள் W/O.கோவிந்தசாமி என்பவரின் இறந்த வருடம் -

மாதம் - நாள் ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட வேண்டும்." என்பன போன்று 7 (ஏழு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி பி.மணிமேகலை, சார்பதிவாளர், தா.பழூர் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 15/12/2022 தேதியிட்டு இனவாரியான பதில்களை அனுப்பியதோடு, அதில் இனங்கள் 1 மற்றும் 4-க்கு மனுதாரரை, "தாங்கள் இறப்புச் சான்றிதழ் கோருபவருக்கு எந்த வகையில் உறவு, என்பதற்கான சான்றினை" சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளதோடு இனங்கள் 2,3,5,6 ஆகியவற்றிற்கு உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துள்ளதோடு, கட்டண விவரத்தையும் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இன்றைய விசாரணையின் போது, மனுதாரர் திருமதி கண்ணம்மாள் என்பவர் தனக்கு பாட்டி என்று தெரிவித்து அவரது இறந்த தேதி மற்றும் இறப்புச் சான்றிதழ் தேவை எனக் கோரினார்.

3. எனவே, மனுதாரர் 11/06/2025 அன்று காலை 11.00 மணியிலிருந்து பிற்பகல் 02.00 மணிக்குள் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு சென்று, இறப்புச் சான்றிதழில் குறிப்பிட வேண்டிய இறந்தவரின் நாள், அவருக்கு சொந்தமானதாக இருந்த நிலத்தின் புல எண். மற்றும் இறந்த திருமதி.கண்ணம்மாள், மனுதாரருக்கு எந்த வகையில் உறவு என்பதற்கான சான்று ஆகியவற்றினை அளிக்க வேண்டும் என ஆணையம் மனுதாரருக்கு தெரிவித்துக் கொள்கிறது. பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன விவரங்களை மனுதாரரிடம் இருந்து பெற்றுக் கொண்ட பின்னர், எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்ற விவரத்தைத் தெரிவிப்பதோடு, அவ்வாறு மனுதாரர் கட்டணத்தை செலுத்திய பின்னர் இனங்கள் 1 மற்றும் 4 ஆகிவற்றிற்கான ஆவணங்களின் நகல்களையும் இனங்கள் 2,3,5,6 ஆகியவற்றிற்கும் கட்டணம் செலுத்திய பின்னர் ஆவணங்களின் நகல்களையும் மனுதாரருக்கு ஒரு வார காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவல்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையினையும், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலையும், ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ.்.தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA 1955/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
தா.பழூர், அரியலூர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.M.ராமசாமி த/பெ.முத்துகிருஷ்ணன்
எண்.10/1, 4வது குறுக்குத் தெரு
தங்கராஜ் நகர், பழைய பெருங்களத்தூர்
சென்னை - 600 063.

RG/PC